# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண் 396/2012**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **தட்சிணாமூர்த்தி** | மதம் | .. | **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. | **சாமிநாதன்** | தொழில் | .. | **நெசவு தொழில்** |
| வயது | .. | 62 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | **வெப்படை** | நாள் | .. | 06.07.2023 |
| வட்டம் | .. | **குமாரபாளையம்** | | | |

2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 06-ஆம் நாள் வியாழக்கிழமை திரு. தட்சிணாமூர்த்தி த/பெ. சாமிநாதன் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பு 1 ஆம் சாட்சியின் முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி ஆவேன். நான் இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பு 1ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அந்த விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

ஆவணங்கள் குறியீடு செய்ய பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.1 ன் முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் / தட்சிணாமூர்த்தி

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.